**மொனறாகல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொனறாகல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொனறாகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபைக்குரிய 10 கட்டிடங்களின் பெறுமதி இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டு இருந்ததால் ரூபா 44,631,460 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் மூலதன கணக்கிற்கு வருமானத்தினால் பங்களிக்கும் கணக்கு கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 08 கட்டிடங்களின் பெறுமதி மூலதனமாக்கப்படாமையால் காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கின் மீதி மற்றும் மூலதன கணக்கிற்கு வருமானத்தினால் பங்களிப்பும் கணக்கு ரூபா | நிர்மாணங்களுக்குரிய கொடுப்பனவு குறித்த ஆண்டில் மேற்கொள்வதற்கு முடியாமையால் கணக்கீடு செய்வதற்கு சிக்கலாக இருந்ததாகவும் அக்குறைபாடு அடுத்த நிதக்கூற்றுக்கள் | சபைக்குரிய அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 8,080,046 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | தயாரிக்கும் போது சீராக்குவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | காணி கட்டிடங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 915,200 ஆன கட்டிடங்கள பழுதடைந்திருந்தமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை உடைத்து அகற்றியிருந்த போதும் அப்பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்படாமையால் அப்பெறுமானத்தினால் கட்டிடங்களின் பெறுமதி கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக அம்மீதிகள் கணக்கிலிருந்து அகற்றுவதற்கு முடியாததாகவும் எதிர்காலத்தின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | உடைத்து அகற்றப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானப் பங்களிப்புக் கணக்கிலிருந்து நீக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்பு ஆகிய கணக்குகளின் மீதிகளுக்கிடையே ரூபா 123,832 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்ட போதும் அவ்வேறுபாட்டுக்கான காரணங்கள் கணக்கு ஆய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2013 ஆம் ஆண்டிலிருந்து வரும் இனங்காணப்படாத வேறுபாடு எதிர்காலத்தில் சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆதனங்கள் பொறிக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதாக கருத்திற்கொள்ளப்பட்ட முழுப்பெறுமதி மூலத ஈடுபாட்டிற்கு வருமானத்தால் பங்களிப்பும் கணக்கிற் செலவு வைக்கப்படுவதால் அக்கணக்கில் அந் இரண்டு கணக்குகளு மீதிகள் சமமாக இருச் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது உழவு இயந்திர திருத்தச் செலவினமான ரூபா 390,590 கணக்கீடு செய்யப்படாமையால் மிகை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால், கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் கணக்குல தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செலவினம் சரியாக இனம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் 03 கணக்கு களுக்குரிய எந்தவொரு தகவலும் சபையிடம் இல்லாமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 689,214 ஆன பெறுமதி போலிச் சொத்துக்களாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நீர் கட்டணங்கள் அறவிட வேண்டிய தரப்பினரைத் கண்டுபிடிப்பதற்கு கொள்வதற்கு வெவ்வேறு நடைமுறைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, அறிவிக்கப்பட்டிருந்தது. | நடைமுறைச் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்த அறவிட வேண்டிய நீர் கட்டணங்கள் அறவிடக்கூடிய தரப்பினர் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 64,410,417 ஆக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,842,362 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்குரிய ரூபா 7,161,506 மற்றும் முன்னைய ஆண்டுக்குரிய ரூபா 11,621,282 ஆன நிலுவை வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமையால் வீதவரி அறவீட்டில் தாமதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வீதவரி அறவிட வேண்டும். |
| (ஆ) | 2010 ஆம் ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை சபையின் 11 ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியதால் அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகைத் தொகை ரூபா 11,740,750 அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமையால் வாடகை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வரி விரைவில் அறவிடப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### வெளிப்படையான மோசடிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொவிட் 19 தொற்று நிலைமையும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக 2020 ஏப்ரல் 11 ஆம் திகதி 03 பிரதேச சபை உறுப்பினர்களுக்கு மீண்டும் மீள்நிரப்பும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த ரூபா 475,000 ஆன முற்பணம் ஓராண்டுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த பொதுச்சபைக்கு முன்னர் இப்பணத்தை தீர்வு செய்வதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | தீர்க்க வேண்டிய முற்பணங்கள் தீர்வு செய்யப்பட வேண்டும். |